# வருணனை உரைசெயல் நோக்கில் ஐங்குறுநூறு

**த. சிவக்குமார்**
முனைவர் பட்ட ஆய்வாளார் (ப.நே.),
பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** II

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

நாட்டின் பெருமை, நாட்டுவளம், நகர்வளம் மற்றும் ஒருவரின் தோற்றப் பொலிவு போன்றவற்றை சிறப்பித்துக் கூறும் நோக்கில் அமைக்கும் உரைசெயலுக்கு வருணனை உரைசெயல் என்று பெயர். ஐங்குறுநூற்றுப் பாடல்களில் வெளிப்படும் வருணனைகள் அக்காலகட்டத்தில் இயற்கை வளம் சிறந்திருந்தது என்பதையும், பல்லுயிர்ப் பெருக்கத்தின் சிறப்பையும் மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்திய பாங்கையும் புலப்படுகின்றன. வருணனைத் தொடர்களைப் புலவர் பெருமக்கள் கூற்றுவழிப் புலப்படுத்துகின்றனர். இத்தகைய வருணனை உரைசெயல் ஐங்குறுநூற்றில் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

### மருதநிலவளம்

மருதநில வளத்தைப் பற்றிக் கூறப்புகுந்த ஓரம் போகியார் ஆதன் அவினியின் (சேரன் செல்வக்கடுங்கோ வாழியாதன்) சேரநாட்டு மருதநில வளங்களை தோழிகூற்று மூலமாக சிறப்பித்துச் செல்கிறார். தலைவனது மருதநில வளத்தைக் குறிக்கும்போது அரும்பு நிறைந்த புன்னை மரங்களும் சிறுமுட்டைகளையும் கொண்ட மீனையும் உடைய நாடு என்கிறார்,

**“...................................
நனையக் காஞ்சி சினையச் சிறுமீன்
பல்லிதழ் நீல மொடு நெய்தல் நிகர்க்கும்
தண்துறை ஊரன்................” (ஐங் - 2)**

என்றும்

**“.................................
முதலைப் போத்து முழுமீன் ஆடும்
தண்துறை ஊரன்
...............................” (ஐங் - 5)**

என்றும் நீர்வள மிகுதி சிறப்பிக்கப்பட்டுள்ளது.

### நெல்வளம்

தலைவனது வயல்களையும் அதில் விளையும் நெல் வளத்தையும் பற்றிக் குறிப்பிடும் போது,

**“வித்திய உழவர் நெல்லொடு பெயரும்
பூக்களுள் ஊரன்
.........................................” (ஐங் - 3)**

என்றும் சிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும்,

**“..........................**
**பூத்த கரும்பின் காய்த்த நெல்லின்**
**கழனி ஊரன்**
**.........................” (ஐங் - 4)**

வித்திய உழவர் நெல்லொடு பெயரும் என்றதால் விளைத்தல் பொய்க்காத வளம் நிறைந்த பகுதி என்றும், ‘காய்த்த நெல்லின் கழனி ஊரன்’ என்றதால் விளைச்சலின் சிறப்பையும் ஒருங்கே உணர்த்தப்படுகிறது.

**நீர்த்துறையின் சிறப்பு**

துறையின் சிறப்பையும் அதில் உறையும் பல்லுயிர்களின் சிறப்பையும் பற்றிக் கூறும்போது,

**“........................**
**முதலைப் போத்து முழுமீன் ஆடும்**
**தண்துறை” (ஐங் - 5)**

மேலும் ஐங்குறுநூறு 5,6,8,9,12,19 பாடல்கள் நீர்த்துறையின் சிறப்பினைப் பற்றி கூறுகின்றன.

**மலர்ந்த பொய்கை முகைந்த தாமரைத்**
**தண்துறை ஊரன்” (மே -6)**

பெரிய மீன்களை முதலை உண்ணும் அளவு நீர்வளம் சிறந்த துறை என்றும், பொய்கையில் தாமரை மலர்கள் மலர்ந்த குளிர்ச்சி பொருந்தியதும், மாமரத்தின் கிளையில் அழகிய மயில் அமர்ந்திருக்கும் சிறப்புக்குரியது என்றும் நாட்டுவளம் சிறப்பிக்கப்படுகிறது. மேலும், கயலும், வைக்கோலும் நாரையும் வளமையின் சின்னங்கள், அப்படிப்பட்ட மூன்றும் நிறைந்த நிலப்பகுதி தலைவனுடையது என்பதை,

**“கயல்ஆர் நாரை போர்வில் சேக்கும்**
**தண்துறை ஊரன்**
**........................” (ஐங் - 9)**

என்று ஐங்குறுநூற்றில் குறிப்பிடப்படுகிறது. இக்கருத்துப் பற்றிப் புறநானூற்றில் குறிப்பிடும் பொழுது,

**“கயலார் நாரை போர்வில் சேக்கும்**
**பொன்னணியானைத் தொன்முதிர்” (புறம் - 24)**

என்கிறது.

**வயல் வளம்**

நீர்நிறைந்த வயல் பகுதியில் நண்டுகளின் செயலைப் பற்றிக் குறிப்பிட்டு வளப்பத்தை உணர்த்தும்போது,

**“.................. முதுநீர் அடைகரைப்**
**புள்ளிக் களவன் ஆம்பல் அறுக்கும்............” (ஐங் - 21)**

எனவும்,

**“அள்ளல் ஆடிய புள்ளிக் களவன்**
**முள்ளிவேர் அளைச் செல்லும்” (ஐங் - 22)**
**“முள்ளி வேர்அளை களவன் ஆட்டி” (மே – 23)**

என்று சேற்றில் அளைந்த புள்ளிகளை உடைய நண்டுகள் முள்ளிச் செடிகளின் வேர்களிடையே உள்ள தன் வளையில் சென்று தங்கும் சிறப்புப் பொருந்திய வளப்பமான பகுதி என்பது உணர்த்தப்படுகிறது.

இதன்மூலம் சங்கப் புலவர்கள் இயற்கையை எந்த அளவிற்கு உன்னிப்பாக கவனித்து இரசித்து வாழ்ந்தனர் என்பதும், அவற்றைத் தங்களது பாடுபொருளுக்கு எவ்வாறு பயன்படுத்திக் கொண்டனர் என்ற சிறப்பையும் உணரமுடிகிறது.

**நீர்வளம்**

தலைவனது நாட்டின் நீர்வளம் பற்றிக் குறிப்பிடும் பொழுது, கெண்டை மீன் பாய்தலால் மலர்ந்த ஆம்பல் மலர்கள் வண்டுகள் தன்னைவிட்டு நீங்காமல் இருக்கும் ஊரன் என்கிறாள். இதனை,

**"கெண்டை பாய்தர அவிழ்ந்த**
**வண்டு பிணி ஆம்பல் நாடுகிழவோன்" (ஐங் - 40)**

என தொடர்புபடுத்துகிறது. தலைவன் மீண்டு வருவான் தம்முடன் கூடி இன்புறுவான் என்பதை உணர்ந்த இந்த வளப்பம் கூறப்படுகிறது.

**மீன் பாய தாமரை மொட்டு அலர்வது பற்றி,**
**"தேன்பாயும் மீன்பாய செழுங்கமல மொட்டலரும் திருவையாறே" (சம்பந்தர் தேவாரம்)**

என்கிறது சம்பந்தர் தேவாரம். மேலும், வேனில் காலத்திலும் வற்றாத நீர்வளம் உடைய பாண்டியனின் தேனூரைப் போன்ற தண்மை பொருந்திய தலைவி என தேனூரின் சிறப்பைப்பற்றி,

**"திண்தேர்த் தென்னவன் நல்நாட்டு உள்ளதை**
**வேனில் ஆயினும் தண்புனல் ஒழுகும்**
**தேனூர் அன்ன - இவள் தெளிவளை..**
**……………………………….." (ஐங் - 54)**

என்று வளர்ச்சியிலும் வற்றாத தேனூரின் சிறப்புக் கூறப்படுகிறது.

மேலும், மத்தி என்ற வள்ளலின் (காவிரிப்பகுதியை ஆண்ட பரதவர் கோமான்) கழாஅர் நகரத்தின் வளம்பற்றி உரைக்கும்போது நீர் நிறைந்த பொய்கையை கொண்டதும் பொய்கையைச் சுற்றிலும் நறுமணம் மிகுந்த கனிநிறைந்து மாமரங்களைக் கொண்டதும் என்கிறார். இதனை,

**"நறுவடி மாஅத்து விளைந்து உழு தீம்பழம்**
**நெடுநீர் பொய்கைத் துடுமென விழுஉம்**
**கைவண் மத்தி கழாஅர் அன்ன**
**……………………………….." (ஐங் - 61)**

என்ற வரிகள் தெளிவுபடுத்துகின்றன.

மேலும், நீர்வளத்தைப்பற்றிக் கூறுகையில்,

**"கரும்பு நடு பாத்தியில் கலித்த ஆம்பல்**
**அரும்பு பசி களையும் பெரும்புனல் ஊர" (ஐங் - 65)**

என்று குறிப்பிடுகிறது. மேலும்,அல்லியும் ஆம்பலும் ஆழநீரில் தழைக்கும் தன்மையன என்பதால் அதற்கேற்ப பெரும்புனல் ஊர எனப்பட்டது.

**இயற்கை வளம்**

மருதநில தலைவனின் ஊரினது வளத்தைப் பற்றி மேலும் குறிப்பிடும் பொழுது தலையில் பகன்றை மலரைக் கண்ணியாகச் சூடி கரும்பைக் குறுந்தொடியாக பயன்படுத்தி, மாங்கனியை உதிர்க்கும் நாளும் புதுவருவாயை உடையது எனப்படுகிறது. இதனை,

**“பகன்றைக் கண்ணிப் பல்லான் கோவலர்**
**கரும்பு குணிலா மாங்கனி உதிர்க்கும்**
**யாணர் ஊரே!” (ஐங் - 87)**

என்ற பாடல் அடிகள் வெளிப்படுத்துகின்றன. பகன்றை மலர்சூடி என்பதால் நிலவளம் நீர்வளம் ஒருங்கே புலப்படுத்தப்படுகிறது. பகன்றை சூடல் குறித்து,

**“பகன்றைக் கண்ணி பழையர் மகளிர்” (மலைபடு – 459)**

என்று மலைபடு கடாமும்,

**“சில்லோராளர் பனித்துறை பகன்றைப்**
**பாங்குடைத் தெரியல் சூடி” (பதிற்று – 66)**

என்று பதிற்றுப்பத்தும் உணர்த்துகின்றன.

இன்றைய காலக்கட்டத்தில் மாமரத்தைக் காண்டல் அரிது. கண்டால் அதில் கனிகாண்டல் அரிது. ஆனால் அன்றோ கனியை கரும்பால் உதிர்த்து உண்பர். பல்லான் கோவலர் என்பதால்பல்வேறு விதமான இயற்கை வளங்கையும் ஒருங்கே புலப்படுகிறது.

**எருமையின் உணவு**

எருமையானது சேற்றில் படுத்துப் புரண்டு கொண்டு அங்குள்ள அல்லியையும் ஆம்பலையும் உணவாகக் கொள்ளும் வளம் நிறைந்த ஊரன் மகள் என்கிறது. மேலும் ஐங்குறுநூறு 96, 316வது செய்யுள்களும் இதே கருத்தை தெரிவிக்கின்றன. அவ்வூரனின் ஊர்வளத்தைப் பற்றி தலைவன் கூற்றாக வெளிப்படுத்துவதனை,

**“............................**
**நிழல் முதிர் இலஞ்சிப் பழனத்ததுவே**
**கழனித் தாமரை மலரும்**
**கவின் பெறு சுடர்நுதல் தந்தை ஊரே” (ஐங் - 94)**

என்ற பாடலடிகள் வழி அறியலாம். மேலும்,மிகுதியான நிழலை உடைய நீர்நிலையினைவுடையதும் அதில் தாமரை மலர்ந்து அழகு சேர்க்கும் விதத்திலும் அமைந்திருக்கும் ஊரனின் மகள் எனப்படுகிறது. இதன்மூலம் தன் வரவால் ஊரார் மகிழ்வர் என்பது தலைவனின் குறிப்பு.

இவ்வாறு கருத்துப்புலப்பாட்டிற்கு ஏற்ப (உள்ளுறைப் பொருளை விளக்க) இயற்கை அமைப்பையும் உயிரினங்களின் வாழ்க்கை அமைப்பையுமே வருணனையாகப் பயன்படுத்தி அக்காலத்திய மருதநில வளத்தை நம்கண்முன்னாக நிறுத்தினர் சங்கப் புலவர்கள்.

**நெய்தல் நிலவளம்**

நெய்தல் நிலவளத்தைப் பற்றி தோழி கூற்றாகப் புலப்படுத்தும் போது, தலைவனது கடற்கரைப் பட்டினத்தின் சிறப்பானது எப்படிப்பட்டதென்றால் முத்துக்குளிப்பார் மூச்சடக்கி அரிதாகக் கொணரும் முத்துக்கள் தலைவன் நாட்டில் கடற்கரைப் பரப்பில் கண் சிமிட்டிக் கிடக்கும் என்பதை,

**“...................... முழங்குகடல்**
**திரைதரு முத்தம் வெண்மணல் இமைக்கும்**
**தண்ணந் துறைவன்..................” (ஐங் - 105)**

என்ற பாடல் அடிகள் வெளிப்படுத்துகின்றன.

**இசைமயம்**

சேரனின் தொண்டிப் பட்டணத்தில் அலைகள் இடையீடின்றி ஒருவகை ஓசை ஒழுங்கோடு கூற அயலே உள்ள தெருக்கள்தோறும் மத்தளத்தின் இனிய ஓசையும் எழுப்பி சிறப்புறிருந்தது எனப்படுகிறது. இதன்மூலம் மக்கள் மகிழ்ச்சியோடு ஆடலும் பாடலுமாக இருந்த சிறப்பை உணரமுடிகிறது. இதைப்பற்றி, ஐங்குறுநூறு 171 வெளிப்படுத்துகின்றது. இதே கருத்தை புறம் 17, குறுந்தொகை 236வது பாடல்களும் விளக்குகின்றன.

**மணங்கமழ் தொண்டி**

நெய்தலும் ஆம்பலும் மலர்ந்துள்ளதால் வண்டுக்கூட்டம் ஒலித்தற்கு இடமான குளிர்ச்சி பொருந்திய நகரம் தொண்டி என்பதை,

**"வண்டிமிர் பனித்துறைத் தொண்டி" (ஐங் - 172)**

எனவும்,

**"……………….. தொண்டி**
**தண்நறு நெய்தல் நாறும்" (ஐங் – 173)**
**"……………….. தொண்டி அன்ன**
**மணங்கமழ் பொழில்" (ஐங் – 174)**
**"……………….. தொண்டித்**
**தண்கமழ் புதுமலர் நாறும்" (ஐங் – 176)**
**"முண்ட நறுமலர் கமழும் தொண்டி" (ஐங் -177)**

என்ற அடிகளில் நெய்தலும் ஆம்பலும், முண்டகமும் (தாமரையும்) மற்றும் பிற மலர்வகையானும் தண்ணென்ற நறுமணம் மிக்க தொண்டி நகர் என்று தொண்டிப்பட்டினம் சிறப்பிக்கப்படுகிறது.

தலைவியின் அழகிற்கும் பண்பு நலனுக்கும் உவமையாகச் சுட்டப்படும் அளவிற்குச் சிறப்பான பட்டினமாக விளங்கியது எனும்போது அந்நகரின் வளமும் மன்னனின் ஆட்சித்திறமும் ஒருங்கே புலப்படுத்தப்படுகிறது.

**பாண்டிநாட்டு முத்து**

பாண்டிய நாட்டுக் கொற்கைத் துறைமுகம் முத்திற்குப் புகழ் பெற்றதாகும் என்ற சிறப்பை யவன வரலாற்று ஆசிரியர்களும் இடைக்காலத்தில் பாண்டி நாடு போந்த மார்கோபோலோவும் இத்துறைமுகத்தின் பெருமை பேசுகின்றனர். தலைவியின் பல்லிற்கு உவமைகூறப் புகுந்த தலைவனுக்கும் பாண்டிநாட்டு முத்தே நினைவில் தோன்றியதுஅப்போது,

**"……………. நெய்தல் கொற்கை முன்துறை**
**இலங்கு முத்துஉளைக்கும் எயிறுகெழுதுவர் வாய்**
**……………………………………………" (ஐங் - 185)**

என்கிறான்.

சேரநாட்டிலக்கியத்தில் பாண்டி நாட்டின் பெருமை கூறி ஒருமைப் பாட்டுணர்வை வளர்க்கிறார் ஆசிரியர். மேலும் கொற்கை முத்துக்கு பெயர் பெற்றது என்பதை அகம் 27வது செய்யுள் வழியும் அறிய முடிகிறது.

மேலும், தலைவனின் கடற்கரைப் பரப்பைச் சிறப்பிக்கும்போது அரிதான வலம்புரிச் சங்குகளால் உழப்படும் வளம்நிறைந்த பகுதி எனவும், இராப் பொழுதின் இருள் அகற்றும் ஒளி பொருந்திய முத்தை உடையது என்பதை,

**"வலம்புரி உழுத வார்மணல் அடைகரை
இலங்கு கதிர் முத்தம் இருள்கெட இமைக்கும்
துறைகெழு கொண்க
.........................................." (ஐங் - 193)**

என்ற பாடலடிகள் நிறுவுகின்றன.

**மீன்வளம் மிகுந்த கொற்கை**

தலைவனின் இல்லில் விருந்தினர் யாவரும் தடையின்றி உணவருந்திச் செல்லலாம் என்ற கருத்தைக் கூறும் போதும் கூட பாண்டியனின் கொற்கை மீன்வளம் மூலம் உணர்த்துகிறார். இதனை,

**"இருங்கழிச் சேயிறா இனப்புள் ஆரும்
கொற்கைக் கோமான் கொற்கை அம் பெருந்துறை
.................................." (ஐங் - 188)**

பறவை இனங்கள் செந்நிறம் கொண்ட இறா என்னும் ஒருவகை மீன்களைக் கவர்ந்துண்ணுவதற்கு இடமாக கொற்கை விளங்கியதைக் காணமுடிகிறது.

மேற்கண்ட கருத்துகளின் அடிப்படையில் உரைக்கோவையில் வருணனையின் உரைசெயல் அமைப்பு முறையில் ஐங்குறுநூற்று மருதத்திணை பாடல்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை அறிய முடிகிறது.

**துணை நூல்கள்**

1. புறநானூறு
2. குறந்தொகை
3. அகநானூறு
4. மலைபடுகடாம்